# ஆறுமுகநாவலர் பற்றி அறிஞர்கள் குறிப்பிடும் சில அபூர்வச் செய்திகள்

**பண்டிதர் பொன்னம்பலவாணர்**
பொன்னாலை

ஆறுமுகநாவலர் வரலாற்றை அவர் காலத்தில் வாழ்ந்த வே. கனகரத்தின உபாத்தியாயரும் நாவலர் மருகரான கைலாசபிள்ளையும் எழுதியுள்ளனர். இவர்கள் இருவர் வரலாற்றையும் நாவலர் சாதனைகளையும் விளக்கியும் ஆராய்ந்தும் பலர் நாவலர் பற்றி எழுதியுள்ளனர். இப்படியான சந்தர்ப்பங்களில் அறியப்படாத பல நாவலர் சிறப்புக்கள் நாவலர் சிவபதம் அடைந்தபொழுது அக்காலப் பெருமக்கள் பாடிய இரங்கற் பாடல்களில் உள்ளன. அவற்றை அறிவதும் நாவலர் பெருமானிடம் ஈடுபாடும் மதிப்பும் வணக்கம் உண்டாக உதவும்.

சி.வை. தாமோதரம்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் முருகேசப் பிள்ளை, ஆவரங்கால் நமச்சிவாயபிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை (புலவர்), ஊரெழு சரவணமுத்துப் பிள்ளை, மல்லாகம் சி. செந்திநாதையர், கொக்குவில் ச. சபாரத்தினபிள்ளை, திருநெல்வேலி க. வேலுப்பிள்ளை, ஸ்ரீமத் திருநெல்வேலி தண்டபாணி சுவாமிகள், நாவலர் மருகன் ச. பொன்னம்பல பிள்ளை ஆகியோரின் இரங்கற் பாக்கள் கனகரத்தின உபாத்தியாயரின் நாவலர் சரித்திரப் புத்தகத்தில் உள்ளன.

இப்பாடல்களில் நாவலர் சரித்திரங்களில் விளக்கப்படாத பல குறிப்புக்கள் உள்ளதை அவதானித்து மகிழக்கூடியதாக உள்ளது. சிவசம்புப் புலவர் நாவலர் பற்றி விரிவான தெளிவான செய்திகளைக் குறிப்பிட்டிருக்கிறார். எழுபத்திரண்டு சீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்றும் பன்னிருசீர்கழிநெடிலாக ஆசிரிய விருத்தம் ஒன்றும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் மூன்றும் கட்டகலிக் கலித்துறை ஐந்தும் சிவசம்புப் புலவரால் பாடப்பட்டிருக்கின்றன.

பிற புலவர்களின் இரங்கற் பாக்களிலும் பார்க்க இவரது பாடல்களால் நாவலர் பெருமை தெளிவாக்கப்பட்டிருப்பதாக சி.வை. தாமோதரம்பிள்ளை திருப்திப் பட்டதாக ஒரு செய்தி உண்டு. இச் செய்திக்கு ஆதாரமான நிலையில் நாவலர் பற்றி பல ஆதாரமான குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

மதுரைத் தமிழ்ச்சங்கம் மூன்றும் இங்கு ஒன்றான பெரிய சங்கம் - சம்ஸ்கிருத பாஷா வியாகரண சித்தாந்த தர்க்க வேதாந்த நிலையம் - சகலசாத்திரசாகரம் - நன்மாணவகர் கோயிலில் வளர்ந்திடும் சேமவைப்பு - பசிப்பிணிக்கு அறுசுவை உணவு தினம் வழங்கிடும் காமதேனு - வள்ளன்மை ஒழியாத இராசப்பிரபு வந்திருப்பவர் குறைகளுக்கு முன் வேண்டுவ மகிழ்ந்துதவு பாரிசாதம் - கமை அறிவு அடக்க முதலாம் சிகரமுடன் எழுதும் கனகசுகுண மாபூதரம் - காவலர்கள் ஏனையவர்கள் காணிக்கையோடு நிதங் கைதொழும் தேவாலயம் - தேசாபிமானமும் சமயாபிமானமும் சிதையாமல் வாழ்ந்த வாழ்வு - சேர்ந்தவர் செயும் குறை அன்றே மறந்திடும் சித்தசுத்தித்தயாளு- சிற்பும் பலத்தோடு மானந்த நாடகதியான புண்ணியர் - வாழ்வெனும் மயல்சாகரம் தப்பி மிடியில் தளராது அடகநிறை வாய்மை கொடையாதிய தழீகு... ஓங்குபுகழ் ஆறுமுகநாவலர் பெற்ற உயர்வு ஒரு சேர யார்க்குமிலையே...

என்பன போன்ற சுவையும் புதுமையான கருத்துக்கள் சிவசம்புப் புலவரால் அறியவுள்ளன.

கும்பகோணம் பூ. முருகேசப்பிள்ளை மாமிக்குள் கொண்ட மருகிக் குஞ்சண்டையை மாற்றி இந்தப் பூமிக்குட் கல்வியும் செல்வமும் சேரப் (பெற்ற)புலவரெவர் என்று நாவலர் தன்மையை வியக்கின்றது.

நாவலர் நோயுற்றிருந்த வேளையில் படுத்திருப்பார். அவர் கேட்கும்படி திருமுறை ஓதும் செயல் நிகழ்ந்திருக்கின்றது. அப்போது உறக்கத்தாலோ மயக்கத்தாலோ திருமுறை கேட்கும் நிலையில் அவர் இல்லை எனக் கருதி திருமுறை ஓதலை நிறுத்தியபோது நிறுத்தாமல் ஓதும்படி "இம்" என்று பணித்திருக்கின்றார். அதன்படி திருமுறை ஓதியவேளை அவர் உயிர்பிரிந்திருக்கின்றது என்ற நாவலர் சரித உண்மையை ஆவரங்கால் நமச்சிவாயபிள்ளை

*"பின் உடல் விடுநாள் இன்படை அருட்பா*
*ஓதுவார் ஓய "இம்" எனும் குறிப்பிற்கை காட்டிப்*
*பின்பு மோதச் செய்து உடன் அகன்றாய் இப்பெரும்*
*குறிப்பறிந்திலேல் குருவே"*

எனப் பாடியிருக்கிறார்.

நாவலர் பெருமான் சிவபூசை செய்யும் இயல்பை

*"தேவார திருவாசகங்கள் ஓதிச் சிவபெருமான் ஒண்கழற் செம்போதை நினைந்து உள் ளம் நெக்கு நெக்கு உருக ஓட்டந்துடிது துடிப்புக் கொள்ள உடம்புகுறு வேர்வை – வெள்ளமெனக் கண்ணீர் சொரிய ஆனந்தமுற்றே யயர்த்துப் பரவசமாய் மோனச்சிவ நூன் முறைப்படியே செய்யும் சிவபூசைப் செல்வா"*

என்று சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் பாடியிருக்கிறார். அவர் தொடர்ந்து பாடும்பொழுது கண்ணே என